மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பெரிய விவகாரத்தை எழுதிக் கொடுத்தால் நல்லது. பதில் சொல்வதற்கு எளிதாக இருக்கும். இவ்வளவு தகவலும் அமைச்சரிடம் இருக்காது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நாட்டிலே நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவை விரும்பத் தக்க வகையிலும் நடைபெறுகின்றன, விரும்பத் தகாத வகையிலும் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் இந்த அவை பொறுப்பேற்று, பதில் கூறுவது என்பது இயலாது. பல்வேறு முறைகளினுடைய அடிப்படையிலே கொண்டு வந்தால், இந்த அவை பொறுப்பேற்று பதில் சொல்வதற்கு இயலும். ஆக அந்த வகையிலே சொல்லமுடியுமே தவிர, ஒவ்வொரு பிரச்சினைக்கும் பதில் சொல்வதற்கு இடம் கொடுப்பது என்பது, பொருந்தி வராது. அதற்கு இப்படிப்பட்ட ஜீரோ அவரே இந்த அவையைப் பொறுத்தவரையில் இல்லை. அதை அனுமதிப்பதும் கூட தவறு. அதை இனிமேல் கடைப்பிடிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(ஏ) கோட்டூர்புரத்தில் கட்டப்பட்டுள்ள குடிதண்ணீர் தொட்டி குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் கோட்டூர்புரம் பகுதியில் தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட தண்ணீர்த் தொட்டி— (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தந்த அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். அப்போதுதான் பதில் கிடைக்கும். (குறுக்கீடுகள்) வாய்ப்பு கொடுத்தால், பெரிய பிரச்சினை உண்டாகும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் மலர்மன்னன் ஆகட்டும், மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி ஆகட்டும், அவர்களுடைய கருத்துக்களை ஏதேனும் விதிமுறையின் கீழ் எழுதிக் கொடுத்தால், அதற்கான பதிலை வழங்குவதுதான் முறையே தவிர, அவரவர்கள் விருப்பப்படி எடுத்துச்சொல்வது, அதற்கான பதில் பெற வேண்டுமென்பது சரியாக ஆகாது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுப்புவதற்கு அனுமதி கொடுத்துவிட்டேன். இவ்வளவு பெரிய விவகாரம் என்றால் எழுதிக் கொடுங்கள் என்கிறேன். அப்ரோப்பிரியேஷன் பில் வரும்போது உங்கள் கட்சி சார்பில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஆக அனுமதித்தேன். அனுமதிக்காமல் இல்லை. அவ்வளவுக்கும் அமைச்சரிடம் பதில் இல்லை.

திரு க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 நாட்களாக தங்களிடத்திலே சொல்லப்பட்டு, இன்றைய தினம் எழுப்பப்படும்போது, அமைச்சரவர்களிடத்தில் அவற்றுக்கான விவரம் இல்லாத காரணத்தாலோ அல்லது முன்கூட்டியே அவர்களுக்கு எழுதித் தெரிவிககப்படாத காரணத்தாலோ, இந்தப் பதில் சொல்லமுடியவில்லை என்று தெரிவிக்கிறார்கள். எனவே நாளைக்குக் கூட ஒருவேளை தாங்கள், அனுமதித்து, அவர் அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து, அமைச்சர் அதன் மூலம் பதில் சொல்லமுடியுமா என்பதைத் தாங்கள் அவைக்குத் தெரிவித்தால், அந்த உறுப்பினருக்கு இருக்கிற குறை நீங்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதேனும் ஒரு முறையில் வர வேண்டுமென்பதைத்தான் நானும் விரும்புகிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்வது போன்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக வருமேயானால்கூட, பதில் சொல்வதற்கான முயற்சிகளை நாம் எடுக்கலாம். அந்த முறையை கடைபிடிக்கவேண்டும். ஏதேனும் ஒரு விதிமுறையின் கீழ் வர வேண்டுமென்பதுதான் நோக்கம். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானங்களை வரிசையாகத்தான் எடுக்க முடியும். நாளைக்கு எடுக்க இயலாது. நாளைக்கான அஜெண்டா ஏற்கெனவே தயாராகி ப்ரிண்ட்டாகி விட்டது. (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் கேட்பது முறையல்ல. ஒரு நாளைக்கு இரண்டுதான் எடுக்கப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. 100-க்கும் மேற்பட்டு கொடுக்கப்பட்டதில் 90-க்கு அனுமதித்திருக்கிறேன். இன்றைக்கு உங்கள் கட்சி சார்பில் நடத்தப்படும் பத்திரிகையில் விவரங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஓரவஞ்சனை என்று போடப்பட்டிருக்கிறது. நான் எல்லோருக்கும் நியாயமாகத்தான் நடந்து வருகிறேன். 90 கொடுத்து, 30 கொடுத்தால், அது தான் ஓரவஞ்சனை. (குறுக்கீடுகள்) நீங்களே முழுமையாக சப்போர்ட் பண்ண வேண்டும். (கூச்சல்-குழப்பம்)....

(ஜு) பல மாவட்டங்களில் நிலவிவரும் வறட்சி நிலைமை குறித்து

திரு உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு காரியம். தமிழ்நாட்டின் பெரும்பான்மையான மக்களைப் பாதிக்கின்ற ஒரு நிகழ்வினை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களிடமிருந்து அதற்குச் சரியான பதிலும் எங்களுக்கு வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.